தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 15

2012 மார்ச் 28, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு."

பயம் இல்லாதிருத்தல், ஏழைக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் இந்த நான்கினையும் குறை இல்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் ச. ஆரோக்கியசாமி அவர்கள் 26—2—2012 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

டாக்டர் ச. ஆரோக்கியசாமி அவர்கள் 1991 முதல் 1996 வரை திருச்சிராப்பள்ளி—1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2012 *மார்ச்* 28

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, திரு. தா. மலரவன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

வட்டாட்சியர் அலுவலகங்கள்

*__4712__—**திரு. தா. மலரவன்:**—

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் தற்போது கோவை தெற்கு வட்டம் மற்றும் கோவை வடக்கு வட்டம் என்று இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. எனவே, கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன் அவர்கள்.*

திரு. தா. மலரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*